




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளான கல்வி, திருமணம் மற்றும் ஈமச்சடங்கு, கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர் குடும்பத்தின் துயர நிலையினை கருத்திற்கொண்டு, காப்பீடு மற்றும் நிவாரணத் தொகைகள் கிடைக்கும் வரை அவரது வாரிசுதாரருக்கு மாதம் ரூ.2,000/– உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைவர் முனைவர் அ.ஜோசப் ஸ்டாலின், நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், 2025 ஆம் ஆண்டிற்கான டாக்டர் ஏ.ஜே.டி. ஜான்சிங் வன உயிரின பாதுகாப்பு விருதினை மறைந்த டாக்டர் வைத்தியநாதன் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு வழங்கிடும் விதமாக அவரது மகனிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2026) தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 6.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 32 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 55.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 185 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 7,127 பயனாளிகளுக்கு 44.05 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீகுமார். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார், ஈ.ராஜா, மரு.தி.சதன்திருமலைக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், நகராட்சி உறுப்பினர் வே.ஜெயபாலன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 23.56 இலட்சம் பேருக்கு பட்டா வழங்கியுள்ளோம்!

# 8.66 இலட்சம் குடும்பங்களுக்கு சொந்த வீடு கட்டும் கனவை நனவாக்கியுள்ளோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவில் பெருமிதம்!

சென்னை, மார்ச் 7-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் 23.56 லட்சம் நபர்களுக்கு பட்டா வழங்கியுள்ளோம் என்றும், 8.66 இலட்சம் குடும்பங்களுக்கு வீடு கட்டும் கனவை நனவாக்கியுள்ளோம் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நிலம் எனும் கனவு: நமது திராவிட மாடல் இன்** ‘AllTime Record’

**8,66,722 குடும்பங்களின் சொந்த வீடு கட்டும் கனவை நனவாக்கியுள்ளோம்!**

**23 லட்சத்து 56 ஆயிரம் நபர்களுக்குப் பட்டா வழங்கியுள்ளோம்.**

**இது குறித்த தகவல்களை உங்களுடன் மகிழ்ச்சியோடு பகிர்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





## வியக்கத்தக்க திட்டங்களால் வெற்றிப் பாதையில்

# அனைத்துத் துறைகளிலும் சாதனை படைக்கும் முதல்வர்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் வாழ்த்து – பாராட்டு!

*சென்னை, மார்ச் 7-*

*தமிழ்நாட்டை வியக்கத்தக்க திட்டங்களால் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறார் முதல்வர் அவர்கள் எனவும், அனைத்துத் துறைகளிலும் சாதனைகளைப் படைத்து திராவிட இயக்க முதல்வர் சாதித்துக் காட்டி வருகிறார் எனவும் நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம், வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.*



*எங்கள் தலைவர் தமிழகத்தை வெற்றிப் பாதையில் மக்களுக்கு வியக்கத்தக்க திட்டங்களை அளித்து உழைப்பால் மட்டுமே உயர முடியும் என்று வளரும் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக திகழ்ந்து அனைத்து துறைகளிலும் சாதனை சாதனை என்று முக்கியமாக இரண்டு துறைகளில் கல்வி மற்றும் சுகாதார மக்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்த வேண்டுமென்று தமிழ்நாட்டில் 25 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைத்து உலகத் தரமான வசதிகள் மற்றும் உயிர்காக்கும் வசதிகளை அளித்து பல சாதனைகளில் தமிழ்நாட்டை முன்னெடுத்து சென்றதில் இதுவும் ஒன்று.*

*மற்றும் மீனவர்கள் குடும்பங்கள் ஏப்ரல், மே மாதங்களில் மீன்பிடி தடை காலத்தில் குடும்பம் அன்றாட செலவுக்கு பணம் தேவையை பூர்த்தி செய்ய ரூபாய் 8000 வங்கிக் கணக்கில் செலுத்தி கண்ணீர் துடைத்தார். தேயிலை விவசாயிகள் வாழ்க்கை சிறக்க வேண்டும் என்று கொள்முதல் செய்யப்பட்ட பசும் தேயிலைக்கு அதிக விலையாக ரூபாய் இரண்டு உயர்த்தி கொடுத்து அவர்களின் வயிற்றில் பாலை வார்த்தார் மற்றும் முதியவர்கள் கைபெண்களுக்கு ரூபாய் 3200 மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு உதவி தொகையாக ரூபாய் 4000 கொடுத்து இத்தனை சாதனைகளை திராவிடம் சாதித்ததற்கு இதுவும் ஒரு சான்று.*

*இவ்வாறு திருமதி. ஓவியம் பாராட்டு தெரிவித்துள்ளார்.*

## குறு, சிறு – நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில்

# தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 7 –**

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு மானியத் தொகைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், சமூக நீதி அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கினை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் வகையில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை (Tamil Nadu Women Entrepreneur Empowerment Scheme – TWEES) தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு மானியத்தொகைகளை வழங்கினார்.

2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், மகளிர் நலன் காக்க சுய உதவிக் குழுக்கள் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். புதுமைப்பெண், தோழி பணிபுரியும் பெண்கள் விடுதியென பல்வேறு முன்னோடித் திட்டங்களை நாடே வியந்து பார்க்கும் வண்ணம் நமது அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் அடுத்த கட்டமாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் மகளிரை தொழில்முனைவோராக உயர்த்திடும் பெருந்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய் வரை வங்கிக் கடன் பெற்று, மகளிர் பல்வேறு தொழில்கள் தொடங்கிட உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள். விற்பனைக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.


**தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தகுதியுடைய பெண் தொழில்முனைவோர்கள், அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை வங்கிக் கடன் பெற்று புதிய தயாரிப்பு, சேவை அல்லது வணிக நிறுவனங்களை தொடங்கவும், தொழில் விரிவாக்கத்திற்காக கடன் பெற விரும்பும் கலைஞர் கைவினைத் திட்ட (KKT) பெண் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் மானியத்துடன் கூடிய கூடுதல் கடன் பெறவும், அரசு மானியமாக திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 25 சதவிகித மானியம் (அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரை) வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும், 18 முதல் 55 வயது வரை உள்ள பெண்/மூன்றாம் பாலின தொழில்முனைவோர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம், மேலும், இத்திட்டத்தில் விண்ணப்பிக்க கல்வித் தகுதி மற்றும் வருமான வரம்பு ஏதும் இல்லை.

இத்திட்டத்தின் கீழ் இது வரை 261.93 கோடி ரூபாய் மானிய மதிப்பிலான 22,356 விண்ணப்பங்கள் இணையவழியாக பெறப்பட்டு அவற்றில் 160.89 கோடி ரூபாய் மானிய மதிப்பிலான 13,779 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில், 27.01 கோடி ரூபாய் மானியத்திற்கான 2,261 விண்ணப்பங்களுக்கு கடன் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல் ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட மணிமகுடம்!



**அ**ன்னை சொர்ணம்,
கல்யாண சுந்தரர்
அருமைத் திருமகனார்!
ஐயா, அண்ணா
வழியில் வந்த
அறிவுப் பெருமகனார்!
பொன்னெழுத் தாலே
பொறிக்கப் படுமோர்
புகழின் திருவுடையார்!
பூக்களை வெல்லும்
புன்னகை மின்னும்
பொலிவின் எழிலுடையார்!

குறைந்திட லற்றக்
குணத்தின் கடலாம்!
கொள்கைக் குறள்நெறியார்!
கொடுத்துப் பதிலைத்
தொடுக்கும் சிந்தனைக்
கூர்மை முனைமுறியார்!
அறம்தான் உயிராம்!
மறந்தும் வாழ்வில்
அரசியல் பிழையறியார்!
அன்பழ கர்! உயர்
பண்பழ கர்!தமிழ்
அமுத மொழிநடையார்!

தனக்குக் கழகம்,
தமிழ், தமிழ் நாடு
தவிர வேறறியார்!
தன்மா னத்தின்
தகைசால் ஏந்தல்!
தாடியில் லாப்பெரியார்!
"எனக்குக் கிடைத்த
இன்னோர் அண்ணன்"
என்றுரைத் தார்கலைஞர்!
"என்பெரி யப்பா"
இழந்தேன் அவரை,என்
றழுதார் தளபதியார்!

வெற்றிலை மீது
சுண்ணாம்பை அளவாய்த்
தடவும் விரல்அழகு!
வெண்கல மணிபோல்
கிண்கிணீர் ஓசை
விளையும் குரல்அழகு!
சற்றும் மங்காத
சூரிய வெளிச்சம்
பொங்கும் விழியழகு!
சட்டைப் பொத்தான்
இடத்தில் மாறித்
தங்கும் தனியழகு!

தோட்டா வைப்போல்
துளைத்துப் பகையைச்
சொல்லால் சுடும்அழகு!
தோளில் கிடக்கும்
துண்டை எடுத்துத்
தோளில் இடும்அழகு!
"காட்டு ரார்" இவர்
களத்தில் செந்தமிழ்க்
கணைகள் விடும்அழகு!
கடக்களி றொப்ப
நடக்கும் அழகு!
கண்ணே படும்அழகு!

அசையும் ஒவ்வோர்
அடியும் முட்கள்!
அனைத்தும் கடந்த திடம்!
ஆயிரம் ஆண்டுகள்
அழியாச் சுவடுகள்!
அண்ணல் நடந்த தடம்!
திசைகள் வணங்கிடும்
செம்மல்! கல்விச்
செந்தேன் நிறைந்தகுடம்!
தீட்டும் சரித்திரம்
காட்டும் வரிசையில்
"திராவிட மணிமகுடம்!"

பீடு தரும்!தனிப்
பெருமை தரும்!அவர்
பேச்சே சொரணைதரும்!
"பெருமிதம்" என்றால்
"பேரா சிரியர்"
பெயரே நினைவுவரும்!
நீடு நெடும்புகழ்
நிலைத்திருக் கும்!அவர்
நிழலும் அழகுபெறும்!
நித்திரைக் குள்ளும்
கனவாய் வருவார்!
நெஞ்சம் அமைதியுறும்!

... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

